திவுலப்பிட்டி பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியமத்தின் பந்தி இலக்கம் 3.28 இன் பிரகாரம் மற்றும் அதன் இணைப்பு 02 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டலின் EG 6.2 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் நிர்மான வருமானக் கூற்றில் செலவினமாக சீராக்கப்பட்ட நிதிக் கிரயம் ரூபா 226,922 மிகையில் மீண்டும் சீராக்கப்படாது இருந்ததுடன் மிகையில் சீராக்கப்பட்டிருந்த ரூபா 533,576 பெறுமதி எதற்கானது என வெளிப்படுத்தப்படவில்லை. மேலும் விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்ட ரூபா 12,738,051 வட்டி வருமானத்தில் ரூபா 11,692,489 மாத்திரம் மிகையில் மீண்டும் சீராக்கப்பட்டிருந்தது.	நிதிக் கிரயம் ரூபா 226,922 விரிவான வருமானக் கூற்றில் செலவினமாக சீராக்கப்பட்டுள்ளதுடன் மிகையில் சீராக்கப்பட்ட ரூபா 533,576 பெறுமதி திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட ரூபா 74,038,112 இல் மேற்கொள்ளப்பட்ட சீராக்கமாகவும் விரிவான வருமானத்தில் வட்டி வருமானம் ரூபா 12,738,051 உள்ளடக்கப்பட்டுள்ளது.	நியமத்துக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ)	நியமத்தின் பந்தி இலக்கம் 3.30 இன் பிரகாரம் மற்றும் அதன் இணைப்பு 02 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டலின் EG 6.4 இன் பிரகாரம் நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் போது பணமாகக் கிடைத்த மூலதன மாணியப் பெறுமதி ரூபா 90,819,390 ஆக இருக்க வேண்டிய போதிலும் பெற வேண்டிய பெறுமதி ரூபா 30,341,511 தொகையும் உள்ளடக்கி ரூபா 121,160,901 காண்பிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கு உரிய பெற வேண்டிய மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மாணியம் ரூபா 2,998,626 மற்றும் கடன் வட்டியாக செலுத்தப்பட்ட ரூபா 226,922 நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய இலக்கம் LGD/09/2019(1) சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் மற்றும் பொருத்திகளின் பதிவதற்காக LG படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த நிலையான வைப்பு வட்டி ரூபா 1,092,500 ஆக இருந்த போதும் ரூபா 96,816 அதிகரித்து நிலையான வைப்புக் கணக்கிலும் பெற வேண்டிய வட்டிக் கணக்கிலும் சீராக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,072,692 ஆக இருந்த போதும் ரூபா 1,941,181 ஆக ரூபா 131,511 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்குரிய ரூபா 11,917,815 நிலையான வைப்பு வட்டி வருமானம் விரிவான வருமானக் கூற்றில் ரூபா 11,692,489 ஆக சீராக்கப்பட்டமையால் விரிவான வருமானம் ரூபா 225,326 இனால் மேலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.	வட்டி வருமானத்தை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,196,293 ஆன நூலகப் புத்தகங்களின் நன்கொடைப் பெறுமதி சரி செய்யும் போது மூலதன மானியக் கணக்கில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் ஏனைய நன்கொடைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டின் போது வெளித்தரப்பினரிடம் இருந்து கிடைத்த ரூபா 275,563 பெறுமதியான புத்தகங்கள் மூலதன மாணியமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ஏனைய நன்கொடையாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஈ)	2022 ஆம் ஆண்டின் போது கொட்டதெனியாவ சந்தை வளவில் கழிவுப் பொருள் வேறு பிரிப்பதற்காக கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,498,198 மற்றும் கொட்டதெனியாவ வாராந்த சந்தை நவீன மயப்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 3,564,124 பெறுமதியான வேலை பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது மீளாய்வாண்டின் கணக்குகளில் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(உ)	2024 இன் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 171,631 ஆன சூரிய கல தொகுதி பெற்று பொருத்துவதற்காக பணம் பெறுவனவு விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்தான கையளித்தலாக காண்பிப்பதற்குப் பதிலாக மூலதன மாணியத்தில் மாற்றப்பட்டமையால் மூலதன மாணியம் அதிகரித்தும் வருமானம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஊ)	2024 இன் மேல் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சூரிய கல வீதி விளக்கு முறைமையை ஸ்தாபிப்பதற்கான ரூபா 230,000 மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மானியக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக மூலதன மாணியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 230,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(எ)	வலு சக்தி செயற்திறனான வீதி விளக்குகளை வழங்கும் செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதியான ரூபா 8,113,680 மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்படாது இருந்ததுடன் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மாணியமாக காண்பிக்க வேண்டிய மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 7,302,312 பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கிடைக்க வேண்டிய 10 சதவீத நிறுத்தி வைத்தல் தொகையான ரூபா 811,368 பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 8,113,680 மற்றும் பெற வேண்டிய பெறுமதி ரூபா 811,368 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஏ)	மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் 02 கட்டங்களின் கீழ் பெற வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 17,496,450 தொகையும், அந்த பெறுமதிக்கு சமனாக பெற வேண்டிய வீதி விளக்கு தொகுதிகளின் பெறுமதி கடன் கொடுத்தோர் ஆகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. களஞ்சியத்தில் எஞ்சியிருந்த வீதி விளக்கு பொருட்கள் ரூபா 10,364,897 இறுதி இருப்பின் கீழும், பொருள் விநியோகித்த வேலை பூர்த்தி பெறுமதி ரூபா 7,131,553 மீண்டெழும் செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்தின் கீழ் காண்பிக்கப் பட்ட ரூபா 3,700,000 இனால் ரூபா 1,715,000 கட்டிடப் பழுது பார்த்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமையால் அப் பெறுமானத்தால் மீளாய்வாண்டின் செலவினம் குறைத்தும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஒ)	மீளாய்வாண்டின் ரூபா 300,000 ஆயுர்வேத மருந்து நன்கொடை, மீண்டெழும் செலவினத்திற்காக கிடைத்த மாணியமாக விரிவான வருமானத்தில் காண்பிக்கப்படாமல் ஏனைய நன்கொடையாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஓ)	2022 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த ரூபா 212,700,000 ஆன பொது காணி பகுதியின் பெறுமதியை மூலதனமாக்கும் போது மீண்டெழும் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட தவறும் 2023 ஆம் ஆண்டின் போது சரி செய்யும் போது மூலதன மாணியம் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் ஏனைய நன்கொடைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஔ)	மீளாய்வாண்டின் போது கிடைத்த மாணியங்களின் நிறைவேற்றப்பட்ட 19 மீண்டெழும் செயற்திட்டங்களின் கூட்டு மொத்தம் ரூபா 12,141,044 பெறுமதி மீண்டெழும் செலவினத்திற்காக கிடைத்த மாணியமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மூலதன மாணியமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(க)	2023 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 305,941 தொகையும், மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 394,059 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 700,000 கணக்காய்வுக்	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	கட்டணமாகக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 365,941 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(கா)	சபைக்குரிய 03 கட்டிடங்களின் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட ரூபா 2,616,552 கட்டிடமாக மூலதனமாக்கப்பட்டமையால், அப் பெறுமானத்தால் ஆண்டில் செலவினம் குறைத்தும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(கி)	மூலதன மானியத்தின் ஆரம்ப மீதியில் உள்ளடக்கப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு உரிய வருடாந்த பெறுமானத் தேய்வு வீதத்தின் பிரகாரம் ஆண்டில் செலவினத்தில் இனங்காணப்பட்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதிக்கு சமமான பெறுமதி ஒன்று மீளாய்வாண்டின் போது வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கிடைத்த மூலதன மாணியங்களில் செலவிடப்பட்ட அளவான ரூபா 30,959,165 ஆண்டின் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மாணியத்தின் கீழ் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரைர்
மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 08 கணக்கு மீதிகளுக்கும், அவற்றுக்கு உரிய பட்டோலைகளின் கூட்டுத் தொகைக்கும் இடையே ரூபா 23,480,473 ஆன வேறுபாடு காணப்பட்டது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும்.	வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை தொடர்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைகள் நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான விதி			
(i)	விதி 338, 344 மற்றும் 394	சபையினால் வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படுகின்ற 17 ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	ஐயவினா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	தொடர்புடைய விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	விதி 433	ஏதாவது ஆதனம் ஒன்றின் கிரய உபகரண வகுப்பு அல்லது வகுப்பு இனங்காணப்படாத சபை ஒன்று பின்னர் அடுத்து வரும் அறிக்கையிடப்படுகின்ற திகதிக்கு உரிய வகுப்ப அல்லது வகுப்பில் வருகின்ற சொத்துக்களின் கிரயம், மற்றும் உபகரணங்களின் ஆதனங்களின் பெறுமதி இனங்கண்டு அப் பெறுமதி இழிவுப் பெறுமதியாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் மீள் மதிப்பீட்டுக் குழுவினால் காணி மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீட்டுக்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படைக் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படவில்லை.	ஐயவினா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	தொடர்புடைய விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571	இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 3,859,426 தொகையான காலாவதியான வைப்புக்கள் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்க வில்லை.	வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	1980 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 1980/46 என்ற சுற்றறிக்கை, 2016 நவம்பர் 09 ஆம் திகதி இலக்கம் LGD/13/2016 மற்றும் 2020 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம LGD/13/2016(i) என்ற உள்ளூராட்சித் திணைக்கள சுற்றறிக்கை	உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த பின்னர் வாடகை திருத்தப்பட்டு மீண்டும் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்த போதிலும் வாடகைக் காலம் எவ்வளவு என தீர்மானித்து உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் மற்றும் வாடகையாளர்கள் மாற்றமடைந்து செல்லும் போதும் கடை வாடகையாளர்களை இனங்கண்டு உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது அந்த கடைகளை உப வாடகையாளர்களால் பயன்படுத்தப்படுகின்றதா என இனங்காணலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 06 ஆந் திகதி இலக்கம் LGD/01/2024 என்ற உள்ளூராட்சி சுற்றறிக்கை	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கின் படிவத்தின் பிரகாரம் ஊழியர் கடன் தொடர்பாக வருடாந்த கடன் எல்லை பின்பற்றப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,803,231 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,987,661 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’
i.	ஆதன வரியும் வரியும்	14,040	15,214	15,025	189	15,000	14,473	13,446	403
ii.	வாடகை	8,822	10,859	10,753	105	7,269	8,079	7,955	111
iii.	அனுமதிப்பத் திரக் கட்டணம்	,2044	2,078	2,078	-	,2272	2,069	2,069	-
iv	ஏனைய வருமானம்	188,490	122,616	122,616	-	24,857	22,890	22,890	-
		213,396	150,767	150,472	294	49,398	47,511	46,360	514

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்	சபையின் கருத்துரைக	பரிந்துரை
2023 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற 07 பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற 08 முறைப்பாடுகள் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.	மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது.	பொது மக்கள் முறைப்பாடுகளை கூடிய விரைவில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்க	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இணக்கமின்மைகளாக இனங்காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 220,120,170 ஆன இருப்பு விடயங்கள் இரண்டினது பெறுமதியைப் பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்யப்படும்.	வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்தல் வேண்டும்.
(ஆ)	2007 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 593,867 ஆன எரிபொருள் மற்றும் ரூபா 2,480,411 ஆன ஏனைய முற்பண மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 3,074,278	உள்ளுராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	முற்பண மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

	மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் சேர்த்தலின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 75,601,641 கூட்டுத்தொகையான 06 விடயங்களுக்குரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் அல்லது விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்காய்விற்கு சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 356,361,041 ஆன மூலதன செலவினம் மாணியங்களுக்கு உரிய விரிவான பட்டோலை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	மூலதன செலவினம் மானியத்தின் ஆரம்ப மீதியாகும்.	கணக்காய்விற்கு சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்தல் ரூபா 17,202,703 தொகையும், வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ரூபா 19,816,298 தொகையும் ஆக இரண்டு செயற்திட்டங்களுக்கு உரிய ரூபா 37,019,001 கூட்டுத் தொகையான செலவினம் மீண்டெழும் செலவினமாக ஏற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படை எவை என கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.	உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்காய்விற்கு சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	காணி, பொதுக் கிணறுகள் மற்றும் பொது மயாண நிலங்கள் போன்ற 281 ஆதனங்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 493,699,407 இற்கு உரிய உரித்துக்களை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(எ)	நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளில் 99 கட்டிட விடயங்கள், 41 பொருத்தி விடயங்கள், 43 கணனி விடயங்கள், 56 அலுவலக உபகரண விடயங்கள் மற்றும் 25 தளபாட உபகரண விடயங்களின் தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேடுகளில் நாளது வரையாக்கப்படாது இருந்ததுடன் வீதிகள், பாலங்கள், மதகுகளுக்கு உரிய நிலையான சொத்துப் பதிவேடும் பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம்.	நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஏ)	2022 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் 2264/18 என்ற வர்த்தமாணியின் ''ஈ'' இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம்.	சுற்றாடல் அனுமதிப் பத்திர ஆய்வு ஒன்று வருடாந்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஐ)	பொது வைப்பு பதிவேட்டில் 14 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய 19 உத்தியோகத்தர்களிடம் இருந்து மேலதிக அறவிடல்களின்	விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு	அடையாளங்களை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு

	கூட்டுமொத்தம் ரூபா 131,572 தொகை ஆட்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	2012 ஆம் ஆண்டின் போது ரூபா 495,000 தொகையில் நெக்பாக் கணனி மென்பொருள் கொள்வனவு செய்து ஆதனவரி வருமானத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்ட போதும் ஏனைய வருமானத் தகவல்கள் கணனி மென்பொருள் உள்ளடக்கப்படாமையால் மென்பொருளைப் பெற்றுக் கொண்டதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாது இருந்ததுடன் சபையினால் கணனி மென்பொருள் வழங்கிய நிறுவனத்துடன் செலுத்த வேண்டிய சேவைக் கட்டணத்தை தீர்மானித்து உடன்படிக்கையும் செய்யப்பட்டிருக்கவில்லை.	விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மென்பொருளைப் பெற்று எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஓ)	2024 ஆம் ஆண்டிற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் வர்த்தமாணியின் பிரகாரம் அறிவித்தல் பதாதைக் கட்டணம் மாற்றம் அடைவதை வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் சபையில் இருந்து கோரப்பட்ட அறிவித்தல் பதாதை விண்ணப்பப் பத்திரத்தில் அல்லது அதன் இணைப்புக்களில் உரிய அறிவித்தல் பதாதை வகைகள் குறிப்பிடப்படாமல் அறிவித்தல் பதாதைக் கட்டணம் கணிப்பிடுதலின் சரியான தன்மையும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாது இருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	வருடாந்தம் அறிவித்தல் பதாதை ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் விண்ணப்பப் பத்திரங்களில் அறிவித்தல் பதாதைகளில் குறிப்பிடப்படல் வேண்டும்.
(ஔ)	சபையினால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு உரிய முறையே ரூபா 26,800 தொகை, ரூபா 106,787 தொகை மற்றும் ரூபா 35,000 ஆன ரூபா 168,587 கூட்டுத்தொகையான வேலைக் கடன் கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம்.	கடன் கொடுத்தோர் நிலுவைக் கடன் கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட இறைச்சிக் கடை மற்றும் 17 ஆட்டிறைச்சிக் கடைகளுக்கு இடையே 15 கடைகளின் பெறுகைகளின் போது விண்ணப்பத்திரம் சமர்ப்பிக்காமல் முன்னர் காணப்பட்ட கேள்வித் தொகையில் ஏதாவது சதவீதம் ஒன்றை சேர்த்து வாடகை அறவிட்டு பழைய வாடகையாளர்களுக்கு உடன்படிக்கை இன்றி வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை அறிவித்தலின் நிபந்தனை இலக்கம் 10 இன் பிரகாரம் உடன்படிக்கை செய்யும் போது கேள்விதாரர் கோரியிருந்த தொகையில் 75 சதவீதத்திற்கு சமமான ஆதனப் பிணை ஒன்று	ஏற்றுக் கொள்கின்றோம்.	பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் ஆதனங்களை வாடகைக்கு வழங்குதல் வேண்டும்.

	வைக்க வேண்டியிருந்த போதிலும் உடன்படிக்கை கைச்சாத்து இட்டு கேள்வி வழங்கப்பட்ட 02 இறைச்சிக் கடைகளுக்காக அவ்வாறான ஆதனப் பிணை ஒன்று பெறப்பட்டமை வெளிப்படுத்தப்படவில்லை.		
(ஆ)	2008 பெப்ரவரி 18 ஆந் திகதிய கடிதம் மூலம் திவுலப்பிட்டி பிரதேச செயலகத்தால் வல்பிட்ட துருசெவன விற்பனை மேம்படுத்தல் நிலையத்தின் விற்பனைக் கொட்டகை சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் சபையினால் வாடகையாளருடன் உடன்படிக்கை செய்தல் 2024 ஆம் ஆண்டு வரை 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டு சபையுடன் சட்ட ரீதியான கடப்பாடு இன்றி மேற்கூறப்பட்ட கடைகள் வாடகைக்கு வழங்கிய தரப்பினரிடமிருந்து வருமானம் அறவிடப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாட்டுடன் வருமானத்தை உழைத்தல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
சபையின் தூனகஹ உப அலுவலகத்திற்கு உரிய ரன் பழந்தாகம சனசமூக மண்டபம் மற்றும் பல்நோக்குக் கட்டிடம், ஹொரகஸ்முல்ல திக்விலயாய சனசமூக மண்டபம் மற்றும் நூலகக் கட்டிடம் மரதகஹமூல சிசில செவன சனசமூக மண்டபம் மற்றும் முன்பள்ளி பாடசாலை, திவுலப்பிட்டி மலசல கூடம், மரதகஹமூல கழிவுப் பொருள் சேகரிக்கும் நிலையம், கல்கந்த வாராந்த சந்தை நிலத்தில் இறைச்சி கடை, அஸ்வன்னவத்த வலஹேன சனசமூக மண்டபம் மற்றும் கொட்டதெணியாவ (களுஅக்கல) உபஅலுவலகத்திற்குச் சொந்தமான ரேந்த சந்தை, அல்விஸ் சில்வா பல்நோக்கு கட்டிடம் மற்றும் படல்கம உபஅலுவலகத்திற்கு உரிய படல்கம வாராந்த சந்தைக் கட்டிடம் மற்றும் மீன் கடை, வடம்பெல்ல மற்றும் படல்கம பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் கடைகள், வடக்கு களுவாரிப்புவ பல்நோக்கு கட்டிடம் போன்ற சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குரிய சொத்துக்களை உச்ச அளவில் ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 144,755,218 ஆன காணி மற்றும் கட்டிடங்களில் 97 ஆதனங்களின் கிரயம், உபகரணப் பதிவேட்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணப் பதிவேடு நாளது வரையாக்கப்படல் வேண்டும்.

(ஆ)	தூனகல உபஅலுவலகத்திற்கு உரிய கட்டு வெல்லேகம சந்தி குடிநீர் கிணறுக்கு அருகில் இருக்கின்ற காணி உரிமையாளரால் அனுமதியற்ற வகையில் உரித்து பெறப்பட்டு ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்யபட்டு தற்போது அந்த இடத்தில் சில கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் சபை இது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்க வில்லை.	பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குரிய ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	50 பேர்ச் அளவான கலபடவத்த / கொடிகமுவ காணி எல்லை குறித்துரைத்த ரீதியில் இனங்காணாமல் காடு வளர்ந்து, சபையின் பெயர் பதாதை அல்லது பெயர் பதாதை இன்றி காணப்பட்டதுடன் வீதி ஒன்றை அமைப்பதற்கு காணியில் காணப்பட்ட கணிசமாக மரங்கள் வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் களற்றி எடுக்கப்பட்டிருந்தமை பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	10 பதவிகளுக்குரிய பதவியணியினரில் 21 பேர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் வருமானப் பரிசோதகர் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 04 இற்கு இடையே 03 பேர்களின் வெற்றிடம் காணப்பட்டமை சபையின் வருமானத்தை உழைக்கும் பணிகளுக்காக நேரடியாகத் தாக்கமளித்திருந்தமையும், வேலை ∴ கள பரிசோதனை மற்றும் மின்சார தொழில் நுட்பவியலாளரில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் யாவும் வெற்றிடமாகக் காணப்பட்டமை சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடியாத் தாக்கமளித்திருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் கோரப்பட்டுள்ளனர்.	சபையின் கடமைகளில் செயற்திறனாக தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் பதவியணியினரை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் சபையில் சேவையாற்றி இருக்காத 08 உத்தியோகத்தர்களில் கூட்டுமொத்தமான ரூபா 41,300 ஊழியர் பிணை வைப்புத் தொகை உரிய உத்தியோகத்தர்களுக்கு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் மரணமடைந்த உத்தியோகத்தரின் இரண்டு கணக்குகளில் காணப்பட்ட ரூபா 6,628 ஆன பிணை வைப்பு அந்த உத்தியோகத்தரின் உரிமையாளர்களுக்கு விடுவிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊழியர் பிணைப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2019 சனவரி 12 ஆம் திகதிய இலக்கம் DMA2019/01 என்ற முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 40(3) பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் கோவையின் இலக்கம் 134(1) இன் மூலம் உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளகக் கணக்காய்வுக் அச்சுத்தல் மற்றும் நிபந்தனைகள் இன்றி கணக்காய்வாளருக்கு பக்கசார்பற்று செயற்படுவதற்காக தேவையான முறையான பணிகளை நடாத்த வேண்டியிருந்த போதிலும் சபையில் 2024 ஆம் ஆண்டிற்காக இறைச்சிக் கடை, மீன் கடை வாடகைக்கு வழங்குவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக் குழுவிற்காக சபையினால் உள்ளக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக மேற்கூறப்பட்ட பிரகாரம் பக்க சார்பு அற்ற அறிக்கையிடலுக்கும் நியாய தன்மைக்கும் இடையூறாக இருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	கணக்காய்வு அதிகாரச் சட்டம், நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.